Registered as a News Paper in Sri Lanka.

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

දිනක්කතිර

ஒளி - 01 - கதிர் - 174 04-10-2000 புதன்கிழமை பக்கங்கள் - 08 விலை - ரூபா 5/-



சமய -பிரதேச வேறுபாடுகளில்லா மனிதம் நிறைந்த சேவகனாக...

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரஜைகள் முன்னணி வேட்பாளர்

பூ.வி.எம்.ஐ.றஹ்மத்துல்லாஹ்



X

எனது இலக்கம் 7

குடும்பத்திற்கு ஒருவர் எனக்கு வாக்களியுங்கள்!
அசாத்தியம் என்பதை சாத்தியமாக்குவோம் !

# யாழ் தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகம் மீது தாக்குதல்

## ஈ.பி.டி.பி மீது ஆனந்தசங்கரி குற்றச்சாட்டு டக்ளஸ் தேவானந்தா மறுப்பு



(யாழ் நிருபர்)

**யாழ்ப்பாணத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி காரியாலயம் மீது ஈ.பி.டி.பி. ஆதரவாளர்கள் என கருதப்படும் கோஷ்ரியினரால் முற்றுகையிடப்பட்டு தாக்கப்பட்டுள்ளது. என தமிழர் விடுதலைககூட்டணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

இது தொடர்பாக ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் மறுப்பு தெரிவித்துள்ளார். நேற்று பகல் பதினைந்துக்கு மேறபட்ட கோஷ்டியினர் கூட்டணி அலுவலகம் முன்பாக திரண்டு நின்று ஆர்பாட்டம் செய்தனர் கூட்டணிக்கு ஏதிரான வார்த்தைப்பிரயோகங்களை மேற்கொண்டனர்.

பின்னர் கூட்டணியினரின் கட்சிக் கொடிகள் பதாதைகள் எனபவற்றை கிழித்து அகற்றிவிட்டு அலுவலக விளம்பரப்பலகையும் நொருக்கி விட்டு சென்றதாக தெரிவிக்கப் படுகிறது.

இது தொடர்பாக தமிழர் விடுதலைக்கூட்டணி கூட்டணியின்

(8ம் பக்க பார்க்க)



## ஹிஸ்புல்லா வைபவங்களில் கலந்து கொள்ள மாட்டார்.

(ஏறாவூர் நிருபர்)

தபால் தொலைத் தொடர்புகள் தகவல் துறை பிரதியமைச்சரும் தேசிய ஐக்கிய முன்னணி பிரதித்தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளருமான ஏம்.எல்.ஏ.எம் .ஹிஸ்புல்லா கலந்து கொள்ள ஏற்பாடு செய்யபட்டிருந்த சகல உத்தியோக பூர்வ வைபவங்களும் மறு அறிவித்தல் வரை ஓத்தியவைக்கப்பட்டுள்ளது. கடந் சில் தினங்கலுக்கு முன்னா பிரதியமைச்சா ஹிஸ்புல்லாவை இலக்கு வைத்து இரு தடவைகள் நடத்தப்பட்ட குண்டு தாக்குதலையடுத்து பாதுகாப்பு

(8ம் பக்க பார்க்க)

## தற்கொலை குண்டு தாரியே குண்டினை வெடிக்கச் செய்தார்.

(அனஸ்)

நேற்று முந்தினம் மூதூரில் தற்கொலை குண்டுத் தாக்குதலில் மரணமடைந்த 20 முஸ்லிங்களின் ஜனாஸா நல்லடக்கம் நேற்று நண்பகல் 11.00 மணியளவில் மூதூா் பிரதேச மையவாடிகளில் பல ஆயிரக்கணக்கான மக்களின் கண்ணீர் அஞ்சலியின் மத்தியில் இடம்பெற்றது.

நேற்றைய தினம் மூதூா் . திருமலை . கிண்ணியா பிரதேசமெங்கும் காரியாலயங்கள் அனைத்தும் மூடப்பட்டு வெள்ளைக்கொடிகள் பறக்க விடப்பட்டன.

சமபவ தினம் கூட்டம் முடிவுற்ற போது ஜன ஐக்கிய முன்னணி வேட்பாளரான உவைத்துள்ளா . அவரது பிரதான ஆதரவாளர்களும் வாகனத்தில் ஏறிப்புறப்படும் சமயம் திடிரென வாகனத்தில் பாய்ந்த தற்கொலை குண்டு தாரியே வேட்பாளரை இறுகக் கட்டிபிடித்து குண்டை வெடிக்கச் செய்தார் என்று தெரியவுருகிறது.

அரச அதிபரின் பணிப்புரைக்கு அமைய மூதூர் பிரதேச செயலாளர் ஏ. நடராஜா நிவாரண கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

(4ம் பக்க பார்க்க)

## வாக்குப்பெட்டிகளை கண்காணிக்க அரசியல் பிரதிநிதிக்கு ஆணையாளர் அனுமதி !

(கொழும்பு)

வாக்குகள் எண்ணும் மத்திய நிலையத்திற்கு வாக்குப் பெட்டிகளைக் கொண்டு வருவது முதல் வாக்குகள் எண்ணும் பணி ஆரம்பிக்கப்படும் வரை அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதி நிதி ஒருவர் வாக்களிப்பு நிலைத்தில் இருப்பதற்கு தோ்தல் ஆணையாளரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் செயளாளர் காமினி அத்துக்கோரள் ளையினால் மேல் முறையீட்டு நிதிமன்றத்தில் சமா்ப்பித்திருந்த மனு தொடர்பான விசாரணை நீதியரசா்களினால் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே தேர்தல் ஆணையாளர் இதனை தெரிவித்துள்ளார்.

வாக்குப்பெட்டிகளை பாதுகாப்பதற்கு எழுத்து மூலமான உத்தரவினை வழுங்குமாறு கோரிய மேல்

(4ம் பக்க பார்க்க)

## வந்தாறுமூலையில் படையினர் மீது துப்பாக்கி சூடு ஒரு இராணுவ வீரர் பலி.

(ஏறாவூர் நிருபர்)

வந்தாறுமூலையில் கடமையில் ஈடுபட்டுள்ள படையினா் மீது நேற்று மாலை 5.30 மணியளவில் விடுதலைப் புலிக்ள் பதுங்கியிருந்து மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் செங்கலடி இராணுவ் முகாமைச் சேர்ந்த இராணுவ வீரர் லோரன்ஸ் கோப்பிரல் எஸ்.ஏ. ஜெயதந்திரா உயிரிழந்துள்ளார். இவரது சடலம் மட்டக்களப்பு போது வைத்திய சாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

## அழுகிய நிலைய்யில் 36 படையினரின் சடலங்கள் புலிகளால் மீட்பு !

(வவுனியா நிருபர்)

ஓயாத அலைகள் 4 நடவடிக்கை மூலம் மீட்டு எடுத்துள்ள 20 கிலோ மீற்றர் நிலப்பரப்பில் படையினரின் 36 சடலங்கள் அழுகிய நிலையில் காணப்பட்டு மீட்டெடுத்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த மாதம் 26ம்திகதி ஆரம்பிக்கப்பட்ட ஓயாத ஆலைகள் 4 நடவடிக்கை தொடர்கிறது. கிளாலி எழுது வெட்டுவான் காப்பரண்கள் 12 யை மீட்டெடுத்துள்ளதாகவும் புலிகள் அறிவித்துள்ளனர் .

ஒவ்வொரு காப்பரண்களும் முகாம்களுக்குரிய பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் ஒரு பிரிகேட் படையினர் பாதுகாப்பு வழங்க 12 இராணுவத்தினர் காவல் புரிந்ததாகவும் புலிகள் அறிவித்துள்ளனர்.

கிளாலிப்பகுதியில் மீட்டெடுத்துள்ள பகுதியல் உள்ள பொறி வெடிகள் மிதிவெடிகள் அகற்றும் பணிகளும் விடுதலைப்புலிக்ளால் ஆரம்பீக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.



சுயேச்சை குழு-1 இல்

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்றத் . தேர்தலில்

இரா. துரைரெட்ணம் (ரெட்ணம்) தலைமையில்

மீன் சின்னத்தில் போட்டி

3

சுயேச்சைக் குழு (1)



X

மீன்பாடும் தேன்னாடு வளர்ச்சி பெற மீன் சின்னத்துக்கே வாக்களிப்போம்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF)

# தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055, 24821
பெ(F)க்ஸ் : 065 - 23055
E-mail :- tkathir@snet.lk


## " குழம்பிய குட்டை "

நாம் விரும்பியோ விரும்பாமலோ 11 ஆவது பாராளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் நடக்கத்தான் போகிறது.

தேர்தலுக்கு இன்னும் ஆறு நாட்களே உள்ள நிலையில் கட்சிகளெல்லாம் கச்சைகட்டிக் கொண்டு மும்முரமாக பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

கண்களைத் திறந்தால் தெரிவதெல்லாம் தேர்தல் சுவரொட்டிகள். காதுகள் வெடித்துப்போகுமளவுக்கு ஒலிபெருக்கிச் சத்தங்ள்.

எல்லாமே 'அன்பான தமிழ் மக்களை'(?) விழித்து நிற்கின்றன.

எல்லாமே தாம் தான் தமிழ் மக்களின் பாதுகாவலர்களென்றும், 'அவர்கள்' எம்மோடே இருப்பதாகவும் கூறுகின்றன.

ஆனால் உண்மையில் இவர்களில் பலரை இப்போதும் கூட மக்களுக்கு யாரென்று தெரியாது.

ஒவ்வொரு கட்சிகளும்' வேட்பாளர்களைத் தேடி வீசிய வலைகளில் அகப்பட்டவற்றுக்கு 'நம்பர்' குத்தி மக்கள்முன் நிறுத்தியுள்ளன. சில பு[illegible] கட்சிகள் வீசிய வலையில் அகப்பட்ட 'குஞ்சு மீன்களை'யும் [illegible]ாவது கிடைத்ததே'' என தமது வாக்குப்பசிக்கு இரைய[illegible]ன.

எப்படியோ [illegible] கட்சிகளுமே தமிழர்களுடைய இனப்பிரச்சினையைத் தீர்ப[illegible]கான ஆணையையே கோரி நிற்கின்றன.

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் தமிழர்கள் இதற்குமுன்னரும் வாக்குகள் மூலம் தமது ஆணையை பல கட்சிகளுக்குத் தெரிவித்துள்ளனர்.

1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் 'தமிழர்களுடைய பிரச்சினைக்கு ஓரே தீர்வு தனித்தமிழீழமே' என்ற கோரிக்கையை முன் வைத்து அதனை நிறைவேற்றுவதற்கான ஆணையை தமிழர் விடுதலைக் கூட்டணி கோரியிருந்தது.

அந்த முறை தேர்தலில், தமிழர்கள் முன்னெப்போதுமில்லாதளவு ஒரு வெற்றியை த.வி.கூட்டணியினர்க்கு வழங்கியிருந்தனர்.

அவர்களது ஆணை வீணானதே மிச்சம்.

இவ்வாறே தற்போதைய ஜனாதிபதி முதன்முதலாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோதும் தமிழர் பிரச்சனை தொடர்பாக கண்ணீர்வடித்து அதனைத் தீர்த்துவைக்க மக்களின் ஆணையைக் கோரிநின்றார்.

இலங்கை வரலாற்றில் எப்போதுமில்லாதளவு ஒரு வெற்றியை மக்கள் அவருக்கு வழங்கினர் ஆணையைப் பெற்றுக்கொண்ட ஜனாதிபதி இப்போ சமாதானத்துக்கான யுத்தம் புரிந்து கொண்டிருக்கின்றார்.

இப்போது மீண்டும் எப்படியோ ஜனாதிபதியாகிவிட்ட அவர் இனப்பிரச்சினையைத் தீர்க்க பாராளுமன்றப் பெரும்பான்மைக்காக மக்களிடம் வாக்குக் கேட்டு நிற்கிறார்.

ஆனால் மறுபுறத்தே தேர்தலை எதிர்கொள்ளவெனவே இவரால் நியமிக்கப்பட்ட பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க "யுத்தம் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு" எனப் பிரகடனம் செய்திருக்கிறார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் ஓர் தீவிர இனவாதப் போக்குக் கொண்ட இவரை நாட்டில் ஜனாதிபதிக்கு அடுத்த அதிகாரம் கொண்ட பிரதமர் பதவிக்கு நியமித்ததன்மூலம் இனப்பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதியின் எதிர்கால செயற்பாடுகள் எப்படி இருக்கப் போகின்றன என்பதை அவர் தெளிவாகக் காட்டியுள்ளார்.

ஜனாதிபதி கடைப்பிடிக்கும் போர் மனப்பாங்கை விமர்சித்தபடி இம்முறை தேர்தலை எதிர்கொள்ளும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்ஹவும் யுத்தத்தினால் தமிழர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள் எனக் கண்ணீர் விட்டபடி மறுபுறத்தே இலங்கை இராணுவத்தை ஓர் தொழில்முறை இராணுவமாக (Proffessional Military) வளர்த்தெடுக்க வேண்டும் என்ற கருத்தையும் முன்வைத்துள்ளார்.

இவரது **"உங்களது எதிர்காலம்"** எனப் பெயரிடப்பட்டுள்ள தேர்தல் கொள்கை விளக்கவுரையின் சிங்களப் பதிப்பில் யுத்தத்துக்கு ஆதரவாகவும் தமிழ்ப் பதிப்பில் தமிழர் துயரம் பற்றியும் பேசப்படுவதாக "சிலுமின" என்ற சிங்கள இதழ் விமர்சித்துள்ளது.

மொத்தத்தில் எப்படியோ ஆட்சியைப் பிடிக்கப்போகின்ற இரு பிரதான கட்சிகளும் இரு இனங்களுக்கும் வெவ்வேறு முகங்களைக் காட்டி வாக்குகளை அள்ளுவதிலேயே தீவிரமாக உள்ளன என்பது தெளிவு.

தேர்தல் முடிந்ததும் இவர்களது முகம் எதுவாக இருக்கும் என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல.

பிரதான சிங்களக் கட்சிகளின் நிலை இவ்வாறிருக்க ஏனைய சிறிய சிங்களக் கட்சிகள் தமிழர் சார்பாகவும் எதிராகவும் ஏதேதோ பேசிக் குழப்பிக் கொண்டிருக்கின்றன.

தமிழ்க் கட்சிகளோவெனில் ஏதோவோர் வகையில் ஆயுதங்களால் தம்மைப் பாதுகாத்துக் கொண்டு உயர்ந்தபட்ச ஜனநாயகம் பேசி முழங்கிக் கொண்டிருக்கின்றன.

இவர்களில் யார் வெற்றிபெற்றாலும் ஆட்சி அமைக்கப்போகும் சிங்களக் கட்சிக்கு முண்டு கொடுக்கும் தூண்களாகவே இருக்கப்போகின்றார்கள்.

இவ்வாறு தமிழர்களுக்கு உண்மையாகவே ஒரு தெரிவும் இல்லாத நிலையில் எதற்காக இந்தத் தேர்தல் நடத்தப்படுகிறது என மக்கள் குழம்பிப்போயுள்ளனர்.


குட்டையைக் குழப்பி, குழம்பிய குட்டையில் கிடைத்ததை அள்ளுவோம் என்பதே எல்லாக் கட்சிகளினதும் ஒரே நோக்கம்.

இந்த நோக்கத்தில் மட்டும்தான் எமது கட்சிகள் ஒன்று சேர்ந்து உழைக்கின்றன.

# சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்த கடிதங்கள்

**விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன்பாலசிங்கம் அண்மையில் எழுதி வெளியிட்ட Politics of Duplicity என்ற நூல் ஊடான ஓர் ஆய்வு.**

எவ்வாறாயினும் இப்புத்தகத்திற்குப் பெறமதி உண்டு. அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையே நடந்த தொடர்பாடல்களின் பெரும் பகுதியை அது நேர்மையாக வெளிப்படுத்துகின்றது. வரலாற்றில் முதல் தடவையாக தென்பகுதி மக்கள் உண்மையில் என்ன நடந்தது என்பதை இன்நூல் மூலம் அறிய முடிந்திருக்கிறது.



நாம் எதிர்வரும் நாட்களில் இன் நூல் தொடர்பான மேலதிக விபரங்களையும் பரிமாறப்பட்ட கடிதங்களையும் இங்கு காண்போம். இப்போது பேச்சு வார்த்தையின் இறுதிக் கட்டத்தில் பரிமாறப்பட்ட கடிதத்தைக் காண்போம். அவை 1995ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ம் திகதி புலிகள் மேற்கொள்ளவிருந்த தாக்குதலை அரசு முன்கூட்டியே அறிந்திருந்தது என்பதை மிகத் தெளிவாக புலப்படுத்துகிறது.

முதலில் 16.03.1995 அன்று விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனால் ஜனாதிபதி சந்திரிக்காவிற்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தைப் பார்ப்போம்.

அன்ரன் பாலசிங்கத்தின் கூற்றுப்படி தொடர்ச்சியாகப் பரிமாறப்பட்ட கடிதங்களினால் எந்த வித முன்னேற்றமும் காணப்படாததால் கவலையுற்ற விடுதலைப்புலிகள் நிலமைகளை மீளாய்வு செய்வதற்கான ஒரு காலக்கெடுவை அரசிற்கு விதிக்கத் தீர்மானித்தது. விடுதலைப்புலிகளின் விரக்தி உற்ற நிலையை விளக்கியும் தொடர்ந்த பேச்சுவார்த்தைக்கான தெளிவானதொரு காலக்கெடுவைக் குறிப்பிட்டு தலைவர் பிரபாகரன் அரசிற்கு ஒரு கடிதம் வரைந்திருந்தார்.

விடுதலைப் புலிகள்
தலைமைச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
16.03.1995

மதிப்பிற்குரிய சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க
இலங்கை ஜனாதிபதி, கொழும்பு
கனம் ஜனாதிபதி அவர்கட்கு,

1995 மார்ச் மாதம் நீங்கள் அனுப்பிய கடிதம் கிடைத்தது நன்றி.

உங்கள் கடிதத்தின் முதல்ப்பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேசப் பிரிவு வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையின் சில பகுதிகள் பற்றிக் குறிப்பிட்டு இருந்தீர்கள். இவ் விடையங்கள் தொடர்பான என்னுடைய தனிப்பட்ட கருத்துக்களை உங்களிற்கு விளக்கலாம் என நினைக்கிறேன்.

சமாதானப் பேச்சு வார்த்தைகளை தொடர்வதற்கு அடிப்படையாக உண்மையான இயல்பு நிலை தோற்றுவிக்கப் படுவது அவசியம் என நான் வலியுறுத்தி இருந்தேன். இதை நீங்கள் வரவேற்பீர்கள் என நம்பகிறேன் சில முக்கியமான காரணங்களிற்காக இந்நிலைப் பாட்டை எடுத்துள்ளோம்.

மிகவும் சிக்கல் வாய்ந்த இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு நிலையானதோர் போர் நிறுத்தம் அவசியமாகும் என்றே நாம் கருதுகிறோம்.

பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதற்கு ஒரு யுத்த நிறுத்தச் சூழல் அவசியம் என நாம் விடுத்துள்ள கோரிக்கையையும் இது தொடர்பான எங்களது பார்வையையும் உங்கள் அரசு கருத்திற் கொள்ளாமல் புறக் கணித்தும் உள்ளது.

இது உங்கள் அரசின் அணுகுமுறைக்கு ஓர் ஆதாரமாக அமைந்துள்ளது. ஏனெனில் பேச்சுவார்த்தைக் காலத்தில் மேற்கொண்ட தாக்குதல்கள் உங்களிற்கு யுத்தநிறுத்தம் என்பதன் அர்த்தம் என்னவென்று புரியவில்லை. என்பதையே எடுத்து உ[illegible]ர்த்துகிறது. மேலும் யுத்த நிறுத்த காலத்தின்போது எமது கருத்துக்கள் மீது கவனம் செலுத்தாத உங்களது அரசு நாம் இந்நிலையை எவ்வாறு மறுசீரமைப்பது என தெரிவித்ததையும் கருத்திற் கொள்ளவில்லை. இவை அனைத்திலும் இருந்து எமக்கு தென்படுவதாவது உங்கள் அரசிடம் சமாதானம் தொடர்பான விருப்பம் கொஞ்சமேனும் இல்லை என்பதாகும்.

**'சோனாலி சமரசிங்க'**
**தமிழில் :- றஞ்சன்.**

வடக்கு, கிழக்கு பகுதிகளில் வாழும் பொது மக்களது உரிமைகளும் சமாதானமும் பறிக்கப்பட்டு உள்ள நிலைமை உங்களிற்கு நன்றாகத் தெரியும். அத்துடன் கடந்த காலங்களில் ஆட்சி செய்த அரசியல் கட்சிகள் தமிழர்களது பிரச்சினைகளிற்கு எவ்வாறு இராணுவ நடவடிக்கைகள் மூலம் தீர்வு காண எத்தணித்தனர் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

எங்கள் மக்களின் சமூக, பொருளாதார வாழ்க்கை பல்வேற வகையான கட்டுப்பாடுகளாலும், பல்வேறு சட்டங்களாலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவர்கள் பல காலமாக பல வழிகளிலும் நெருக்கப்பட்ட ஒரு சூழலில் வாழ்ந்து வருகின்றார்கள். இவ்வாறான கட்டுப்பாடுகளால் மக்களது பொருளாதார நிலமைகளும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டும் உள்ளது. தமிழ் மக்களைப் போலவே விடுதலைப் புலிகளும் சமாதானத்திற்கான ஆணையைப் பெற்றுள்ள உங்களது அரசு இந்த இறுக்கமான நிலமைகளை நீக்கி இயல்பு நிலையைத் தோற்றுவிக்கும் என எதிர்பார்த்தனர். எனவே பேச்சுவார்த்தைகளின் ஆரம்பப்படி நிலையில் இத்தகையதோர் இயல்புச் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என நாங்கள் மிகத் தாழ்மையுடன் கேட்டிருந்தோம்.

(நாளை தொடரும்.............)

# எளிமையின் தந்தை புனித பிரான்சிஸ் அசிசி

**இன்று புனித பிரான்சிஸ் அசிசியின் நினைவுநாள். அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

இத்தாலி நாட்டில் உள்ள அசிசி நகரிலே கி.பி 1182ல் பீற்றர் பெர்ணதோனுக்கும் பிக்கா அம்மையாருக்கும் மகாகப் பிறந்த பிரான்சிஸ், இயேசு பிரானிகன் பிறப்பையொத்த பிறப்பாக மாட்டுத்தொழுவத்திலே பிறந்தார். இயேசுவின் பிறப்புக்குத் தீர்க்க தரிசனங்கள் கூறப்பட்டதுபோல்,பிரான்சிசின் பிறப்புக்கும் தீர்க்க தரிசனம் கூறப்பட்டது. இயேசுவின் குழந்தைப்பருவத்தில் புனித மரியா கொண்டிருந்த ஆர்வத்தைப் போன்ற ஆர்வத்தை, புனித பிரான்சிசின் தாய் பிக்காவும் கொண்டிருந்தார். பாடசாலைப் படிப்போடு இத்தாலி, பிரான்சு போன்ற மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார்.



வர்த்தகரான, பிரான்சிசின் தந்தை தமது தொழிலையே தன் மகனும் செய்து வாழ்க்கையில் பெரிய செல்வந்தராக வரவேண்டுமென்று விரும்பி, தன்மகனுக்கும் வர்த்தகத்தைப் பழக்கினார். கடையில் வியாபாரம் செய்யும் வேளைகளில்,

**-அருட்சகோ. ஞா.மரியநாதன்-**

கடைக்கு வரும் ஏழைகளுக்கு நிறையப் பொருட்களும் பணமும் அள்ளிக் கொடுத்து வந்தார். வாலிபப்பராயம் அடைந்த இவர் ஆடல் பாடல்களிலும், குதிரைச் சவாரி, வேட்டையாடுதல் போன்ற விநோத காரியங்களிலும் ஈடுபட்டார்.

அசிசி நகரத்தாருக்கும்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# ராஜ்குமாரை மீட்பது பற்றி அனைத்துக்கட்சிகளின் கூட்டம்

பெங்களூர், அக். 3- நடிகர் ராஜ்குமார் வீரப்பனால் கடத்தப்பட்டு இன்றோடு 66நாட்கள் ஆகிறது. அவரை மீட்கும் முயற்சியில் தமிழக கர்நாடக அரசுகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. இந்த நிலையில் வீரப்பன் பிடியில் இருந்து சினிமா உதவி டைரக்டர் நாகப்பா தப்பி வந்தது நிலைமையை மோசமாக்கியது. வீரப்பனுடன் 4வது



முறையாக பேச்சுவார்த்தை நடத்திய அரசு தூதர் நக்கீரன் கோபால் ராஜ்குமாரை மீட்க முடியாமல் திரும்பி விட்டார்.

**அனைத்துகட்சி கூட்டம்**

இந்த நிலையில் அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து ஆலோசனை நடத்த கர்நாடக முதன்மந்திரி எஸ்.எம்.கிருஷ்ணா அனைத்து கட்சி தலைவர்கள் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார். இந்த அனைத்து கட்சி கூட்டம் பெங்களூரில் இன்று நடக்கிறது. இதில் கலந்துகொள்ள பல் வேறு கட்சி தலைவர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. கூட்டத்தில் வீரப்பன் விவகாரத்தை முடிவுக்கு கொண்டு வருவது பற்றியும், ராஜ்குமாரை மீட்க அடுத்து என்ன செய்வது என்பது பற்றியும் ஆலோசனை நடத்தப்படும்.

**மத்திய அரசு உதவி**

ராஜ்குமாரை மீட்க மத்திய அரசின் உதவியை கோருவதா, வேண்டாமா, என்பது பற்றியும் இந்த கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று கர்நாடக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. அனைத்துகட்சி தலைவர்கள் கூட்டம் முடிந்ததும் கர்நாடகத்தில் உள்ள எம்.பி.க்களை முதன்மந்திரி கிருஷ்ணா நேற்று சந்தித்தார். ராஜ்குமார் கடத்தல் விவகாரத்தை முடிவுக்கு கொண்டு வருவது பற்றி அவர்களுடன் ஆலோசனை நடத்தினார்.



**சென்னையில் முடிவு**

நாளை கிருஷ்ணா சென்னை வந்து தமிழக முதலமைச்சர் கருணாநிதியை சந்தித்து பேசுகிறார். அப்போது அடுத்த நடவடிக்கை பற்றி அவர்கள் இருவரும் முடிவு செய்வார்கள்.

## ஆண்மகன் பெற்றெடுக்கப்போகும் முதலாவது குழந்தை

உலகில் முதல் முறையாக லீமிங்வீ எனும் ஆண்மகன் குழந்தை பெறப்போகிறார். இவர் அமெரிக்காவில் உள்ள மல்ன் ஹற்றனில் வசிக்கிறார். சோதனைக் குழாயில் வைத்து உருவாக்கப்பட்ட கரு செயற்கையாக உருவாக்கப்பட்ட கர்ப்பப்பையினுள் வைத்து இவரது அடிவயிற்றுக்குள் வைத்து தைக்கப்பட்டது. கர்ப்பத்தை அவரது உடல் ஏற்றுக்கொள்ளும் வகையில் அவருக்கு பெண் ஹோர்மோன் வாய்வழியாகக் கொடுக்கப்பட்டது. இப்போது கரு வளர்ந்து நல்ல முறையில் இருக்கின்றது. அவரை 3 பேர் அடங்கிய வைத்தியர்கள் குழு 24 மணிநேரமும் கண்காணித்து வருகிறார்கள்.

10 மாதத்தில் கரு முழுவளர்ச்சியடைந்ததும் சிசேரியன் சத்திர சிகிச்சையின் மூலம் குழந்தை வெளியே எடுக்கப்படும். இந்த சத்திர சிகிச்சை சிக்கலானது என வைத்தியர்கள் கூறுகிறார்கள் குழந்தையுடன் கர்ப்பபையும் சேர்த்து வெளியே எடுக்கப்பட வேண்டியருப்பதால் அது ஆபத்தாகியுள்ளது. கர்ப்பபை அதனை சூழவுள்ள உடலுறுப்புகளுடன் ஒட்டியிருக்கும். அதனால் கர்ப்பபையை அகற்றும் போது அவ்வுறுப்புகளும் பாதிக்கப்படலாம் மேலும் சத்திர சிகிச்சையின் போதும் அதிக இரத்தப் பெருக்கு ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளார்கள்.

பலஸ்தீனியர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் கடந்த மாதம் 30ம் திகதி நெற்றஸ்ரீம யூனிஸ் குடியிருப்புக் கருகில் இடம்பெற்ற மோதலில் சிக்குண்டு காயமடைந்த இளைஞரை பலஸ்தீனியர்கள் பார்வையிடுகின்றார்கள். காசா நிலப்பரப்பிலும் வெஸ்ற் பாங்க் பகுதியிலும்



பலஸ்தீனியர்களுக்கும் இஸ்ரெலியர்களுக்கும் நடந்த சண்டையில் 200 பலஸ்தீனியர்கள் காயமடைந்தனர்.

## யூகோஸ்லேவியாவில் எதிர்க்கட்சிகள் சார்பில் மறியல் போராட்டம்

பெல்கிரேடு, அக். 3-

யூகோஸ்லேவியாவில் நடந்த அதிபர் தேர்தலில் தோல்வி அடைந்த மிலோசெவிக் தோல்வியை ஏற்று, பதவி விலக வலியுறுத்தி, எதிர்க்கட்சிகள் மறியல் போராட்டமும், ஒத்துழையாமை இயக்கமும் நடத்தின. குப்பைத்தொட்டிகள், பெரிய யூஜாடிகள், கட்டிடத் தளபாடங் கள் ஆகியவற்றை தெருக்களில் போட்டு மறியல் செய்தனர். ஆனால் பஸ்கள் வழக்கம்போல ஓடின.

இதற்கிடையில், இந்தப் பிரச்சினையில் சமரசம் செய்து வைக்கப்போவதாக ரஷியா அறிவித்து இருந்தது. ரஷியாவின் சமரசத்தை ஏற்கமாட்டேன் என்று மிலோசெவிக் கூறிவிட் டார்.

## உலக வலம்

தொகுப்பு :- பௌஸி

அமெரிக்காவில் தமிழ்ப்பெண் போராட்டம்!

## காதலனுடன் சேர்ந்து வாழ உரிமை வேண்டும்

வாஷிங்டன், அக். 3-

அமெரிக்காவில் வர்ஜினியா மாகாணத்தில் வசிக்கும் தமிழ்ப்பெண் ஆர்த்தி ஜெயராம் (வயது 23) பசுவதைக்கு எதிராக போராடி வருபவர். இவர் ஒருவரைக் காதலிக்கிறார். அவருடன் சேர்ந்து வாழ விரும்பு கிறார். வர்ஜினியா உள்பட 12 மாகாணங்களில், திருமணம் ஆகாமல் ஆணும், பெண்ணும் சேர்ந்து வாழ அனுமதி கிடையாது. அதனால் காதலனைத் திருமணம் செய்து கொள். அல்லது வீட்டைக் காலி செய்து விடு என்று அந்த மாகாண அரசு அவருக்கு உத்தரவிட்டு உள்ளது. இதை எதிர்த்து, ஆர்த்தி கோர்ட்டில் வழக்கு தொடர்ந்து இருக்கிறார். நான் என் காதலரை நேசிக்கிறேன். அவரைத் திருமணம் செய்து கொள்ளவும் திட்டமிட்டு இருக்கிறேன். ஆனால் எங்களை யாரும் திருமணம் செய்து கொள்ளும்படி கட்டாயப்படுத் தக்கூடாது என்று மனுவில் கூறி இருக்கிறார். பசுவதைக்கு எதிரான போராட்டத்தில் ஆர்த்தி ஏற்கனவே தண்டனை அடைந்த வர்.

## போப் ஆண்டவருடன் சீனா மோதல்

பீஜிங், அக். 3- சீனாவில் 1648-ம் ஆண்டு முதல் 1930-ம் ஆண்டு வரை கிறிஸ்தவ மத வளர்ச்சிக்காக பாடுபட்ட 120 பேரை கவுரவப்படுத்தும் நிகழ்ச்சி வாடிகன் தேவாலயத்தில் நடந்தது. சீனாவின் தேசிய தினத்தன்று இந்த நிகழ்ச்சி நடந்தது. இதற்கு சீனா எதிர்ப்பு தெரிவித்து உள்ளது. போப் ஆண்டவர் கவுரவப்படுத்தி உள்ளவர்களில் 2 பேர் கிரிமினல்கள் என்றும், அவர்களில் ஒருவர் தன் சீடர்கள் மணக்கப்போகும் பெண்களுடன் உறவு வைத்து இருந்தார் என்றும் சீன நிர்வாகம் குற்றம் சாட்டியது.

போப் ஆண்டவர் கவுரவித்த வர்கள் அனைவரும் காலனி ஆதிக்கத்தையும், மேற்கத்திய கலாச்சாரத்தையும் பாதுகாத்த வர்கள் என்றும் அது குறை கூறி உள்ளது.

சீனத் தியாகிகளை புனிதர்களாக பெருமைப்படுத்தியது, சீனாவையே கவுரவப்படுத்தியதாக எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, காலனி ஆதிக்கத்தை ஆதரித்தவர்களாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று போப் ஆண்டவர் கூறி இருக்கிறார்.

## ரஷ்ய அதிபர் இந்தியாவிற்கு சுற்றுப்பயணம்

புதுடெல்லி, அக். 3-

ரஷிய அதிபர் புடின் 4 நாள் சுற்றுப்பயணமாக நேற்று டெல்லி வந்தார். பிரதமர் வாஜ்பாய் அளித்த விருந்தில் அவர் கலந்து கொண்டார். டெல்லி வருகை ரஷிய அதிபர் புடின் இந்தியாவில் 4 நாட்கள் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். புடினும் அவருடைய மனைவியும் நேற்று இரவு விசேஷ விமானத்தில் டெல்லி வந்தனர்.

வரவேற்பு இரவு 7-55 மணிக்கு டெல்லி பாலம் விமானப்படை விமான தளத்தில் புடினின் விமானம் தரை இறங்கியது. மத்திய வெளி உறவு மந்திரி ஜஸ்வந்த் சிங் திட்ட அமுலாக்க மந்திரி அருண்ஷோரி ஆகியோர் ரஷிய அதிபரை வரவேற்றனர். ரஷிய துணை பிரதமர் கிலோஷ்னேவ், வெளிநாட்டு மந்திரி இக்னோர் இவானோவ், ராணுவ மந்திரி இக்னோர் ஜெர்ஜியேவ் மற்றும் 150 பேர் அடங்கிய உயர்மட்ட தூது குழுவினரும் புடினுடன் வந்துள்ளனர். விமான நிலைய வரவேற்பு முடிந்ததும் அவர் மவுரியா ஷெரட்டன் ஓட்டலுக்கு காரில் புறப்பட்டு சென்றார்.

கிளிண்டன் தங்கிய அறை ஓட்டல் வாசலில் புடினுக்கு இந்திய பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது. மணப்பெண் போல அலங்காரம் செய்து இருந்த 8 பெண்கள் வரிசையாக நின்று மலர் தூவி அவரை வரவேற்றனர். மவுரியா ஓட்டலின் பிரபல அறையான 'சந்திரகுப்தாவில் புடின் தங்கினார். அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டன், ஜப்பான் பிரதமர் யோசிரோமோரி பார்வையிடுகிறார். இதை தொடர்ந்து மத்திய மந்திரிகளை புதினுக்கு வாஜ்பாய் அறிமுகம் செய்துவைப்பார்.

வரவேற்பு நிகழ்ச்சிக்கு பிறகு அவர் காந்தி சமாதிக்கு சென்று அஞ்சலி செலுத்துகிறார். ஒப்பந்தம் கையெழுத்து இதையடுத்து புடினும் வாஜ் பாயும் நேரில் சந்தித்து பேசுகிறார்கள். அப்போது ராணுவம், விஞ்ஞானம், தொழில் நுட்பம், வர்த்தகம் உட்பட முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்து ஆகின்றன.

ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் புடினுக்கு டாக்டர் பட்டம் வழங்கப்படுகிறது. இரவு அவருக்கு ஜனாதிபதி கே.ஆர். நாராயணன் விருந்து கொடுக்கிறார்.











சமாதானத்தின் பெயரால்
உரிமை சாகடிக்கப்படக்கூடாது.
உரிமையின் பெயரால்
சமாதானம் வாழவைக்கப்பட
வேண்டும்.

பசீர் சேகுதாவூத் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் தேசிய ஐக்கிய முன்னணி



கடந்த 26.09.2000ம் அன்று மட்:. வின்சன்ட் மகளீர் தேசியப் பாடசாலையின் 180வது ஆண்டு நிகழ்வுகள் மிகச் சிறப்பாக நடந்தேறின. அதனை முன்னிட்டு நடைபெற்ற ஊர்வலத்தில் பாடசாலை மாணவிகள் கலந்து கொண்டதையும் முன்னே தமிழ் பாண்ட் வாத்திய குழுவினர் செல்வதை முதலாம் படத்திலும், அதிபர் உட்பட ஆசிரியர்கள் ஊர்வலம் வருவதை இரண்டாவது படத்திலும். பாடசாலை மைதான வளவில் நடைபெற்ற கொடியேற்ற நிகழ்வின் போது பாடசாலை பாண்ட் வாத்திய குழுவினரின் மரியாதையை அதிபர் சுபா சக்கரவர்த்தியுடன் உதவிக்கல்விப்பணிப்பாளர் ஆர்.மாணிக்கராஜா பிரதிக்கல்விப்பணிப்பாளர்(திணைக்களம்) எம்.எம்.ஈ.போல், உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.துரைராஜசிங்கம், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் ஜோர்ஜ் பிள்ளை ஆகியோர் ஏற்றுக்கொள்வதை மூன்றாம் படத்திலும், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மட்/மாவட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் ஆர்.மாணிக்கராஜா சிறப்புரையாற்றுவதை நான்காம் படத்திலும் காணலாம். (படமும்-தகவலும்-மைக்கல்)

## எளிமையின் தந்தை புனித ...........(2ம் பக்க தொடர்ச்சி)

சமாதானஉடன்படிக்கை ஏற்பட்டதால்பிரான்சிசும் தோழர்களும் விடுதலையடைந்தார்கள். மீண்டும் பாப்பரசரின் நாட்டைச் சத்துருக்கள் கைப்பற்றிக் கொண்டார்கள்என்று கேள்விப்பட்டபிரான்சிஸ், தோழர்களுடன் சேர்ந்து பெரிய படையோடு சென்றார். செல்லும் வழியில் பாப்புவின் நாடு விடுதலை பெற்றது எனக்கேள்விப்பட்டதும் மீண்டும் அசிசி நகருக்கு போய்விட்டார். இதிலிருந்து, பிரான்சிஸ் ஒரு நாட்டுப்பற்றும், தேச அபிமானமும் வீரதீரமும் கொண்ட வாலிபனாக இருந்தார் என்று அறிய முடிகின்றது.

பிரான்சிஸ் சிறையில் அடைபட்ட போதும், வியாதிப்பட்டபோதும் நிறையுச் சிந்தித்தார். தியானித்தார். இவ்வுலக வாழ்வும் சுகபோகங்களும் நிலையற்றவை என்ப

பெருஜியா நகரத்தாருக்கும் யுத்தம் நடைபெற்ற வேளையில் பிரான்சிசும் தோழர்களும் ஆயுதம் தாங்கிப்போர் புரிந்தனர். யுத்தத்தில் தோல்வியுற்ற அசிசி நகரத்தாரை பெருஜியப்படைகள் சிறையில் அடைத்தனர். ஒரு வருட சிறைவாசத்தின்பின் இரு நகரத்தாருக்கும் இடையில் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டதால் பிரான்சிசும் தோழர்களும் விடுதலையடைந்தார்கள். மீண்டும் பாப்பரசரின் நாட்டைச் சத்துருக்கள் கைப்பற்றிக் கொண்டார்கள் என்று கேள்விப்பட்ட பிரான்சிஸ், தோழர்களுடன் சேர்ந்து பெரிய படையோடு சென்றார். செல்லும் வழியில் பாப்புவின் நாடு விடுதலை பெற்றது எனக்கேள்விப்பட்டதும் மீண்டும்தையும் நன்கு அறிந்து கொண்டார். வர்த்தகம் முடிந்த நேரங்களில் குதிரைச்சவாரி செய்து தொழுநோயாளிகள் இருக்கும் இடங்களுக்கு போய் அவர்களுக்கு தன்னால் முடிந்த உதவிகளைச் செய்தும் பாழடைந்த, மக்கள் நடமாட்டம் இல்லாத இடங்களில் இருந்த ஆலயங்களுக்குச் சென்று தனிமையில் செபம் செய்து வருவார். புனித தமியான் ஆலயத்திலே, பிரான்சிஸ் செபம் செய்து கொண்டிருக்கும் போது ''பிரான்சிஸ்! என் வீட்டைப் புதுப்பிப்பாயா?'' என்னும் குரலொலியை, சிலுவை மரத்தில் இருந்து வரக்கேட்டு, அவ்விடத்துப் பங்குக்குருவிடம் எடுத்துக் கூறினார்.

பிரான்சிஸ் தன் தந்தையின் வியாபாரத்தில் இருக்கும் வேளைகளில் வரும் ஏழைகளுககுத் தாராளமாய் உதவுவார். புனித தமியான் ஆலயத்தைப் பழுது பார்ப்பதற்காக கடையில் இருந்த பொருட்களை எடுத்து விற்று பணத்தைக் கொண்டு போய் பங்குக் குருவானவரிடம் கொடுத்தார். இதைக் கேள்விப்பட்ட தந்தை கோபம் கொண்டு பங்குக்குருவிடம் முறையிடவே பிரான்சிஸ் பணம் முழுவதையும் ஏன் தந்தை கொடுத்த ஆலயங்களையும் திருப்பிக் கொடுத்துவிட்டு இறைபராமரிப்பிலே நம்பிக்கை கொண்டு. பிச்சை எடுத்து தனது முயற்சியால் ஆலயத்தை புதுப்பித்துக் கொடுத்தார். அழகான இனியைமான பாடல் இயற்றிப் பாட்டுப் பாடிச்சேர்த்த பணங்களைக் கொண்டும் சம்மனசுகளின் இராக்கினி புனித இராயப்பர் போன்ற ஆலயங்களையும் புதுப்பித்துக் கட்டினார். இறைவாக்குரைக்கும் வரத்தையும் பாவித்துக் கூறிய தீர்க்க தரிசனங்களும் நிறை வேறின. புகழ் பெற்ற புனித கிலாரம்மாவின் கன்னியர்மடம் புகழோடு ஆலயமொன்றில் அமையும் என்று கூறிய வாக்கும் நிறைவேறியது.

## கூட்டத்தை குழப்பியவரை மக்கள் மடக்கினர்.

(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூர் மீராகேணிக் கிராமத்தில் நேற்று முன்தினம் திங்கள் இரவு நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் பிரசாரக் கூட்டத்தைக் குழப்ப முயற்சி செய்த குழுவொன்றை மக்கள் மடக்கிப் பிடித்து நையப்புடைத்துள்ளனர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் முதன்மை வேட்பாளருமான அலி ஸாஹிர் மௌலானாவை ஆதரித்து கூட்டம் நடைபெற்று கொண்டிருந்த போது வெள்ளை நிற வேன் ஒன்றில் அவ்விடத்திற்கு வந்த குழுவொன்று பட்டாசு கொழுத்தி கூட்டத்தை குழப்ப முயற்சித்ததையறிந்து பொது மக்கள் குண்டர் குழுவை அடித்து விரட்டியுள்ளனர். அதையடுத்து கூட்டம்தொடர்ந்து நடைபெற்றது.

## வாக்குப்பெட்டி (1ம் பக்க தொடர்ச்சி).

நிதிமன்றத்தில் மேற்படி மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

உயர் நிதிமன்ற நிதியரசர் அசோகடி சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

தேர்தல் ஆணையாளர் பொலிஸ்மா அதிபர்கள் எடுத்திருக்கும் முன்நடவடிக்கைகள் தொடர்பாக அறிவித்ததற்காக மேன் முறையீட்டு நிதிமன்ற நீதியரசர்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்தல் விடுத்திருந்தனர்.

போலி வாக்குகளை கண்டு பிடிக்க தந்திரஉபயம்.

போலி வாக்குச் சீட்டுகள் வாக்குப்பெட்டிகளில் இருந்தால் அவற்றை அடையாளம் காண தந்திரோபாயங்கள் பல கையாள இருப்பதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தேர்தல் தெரிவு அத்தாட்சி உத்தியோகத்தர்களுக்கு விளக்கியுள்ளதாகவும் ஆணையாளர் மன்றில் தெரிவித்துள்ளார்.

மேற்படி மனுவில் , தேர்தல் ஆணையாளர் , சட்டமா அதிபர் , பொலிஸ்மா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிபபிடப்பட்டுள்ளனர்.

## ''தடாகத்தில்'' முதியோர் தினம்

(மட்டு நிருபர்)

முதியோர் தினமான நேற்றைய தினம். அதனை முன்னிட்டு கோரகல்லிமடு ''தடாகம் கிராமிய மக்கள் நிறுவனத்தின்'' காரியாலயத்தில் முதியோர்களை கௌரவிக்கும் நிகழ்வு ஒன்றை தடாகத்தின் தலைவி ஆர்.யோகம்மா தலைமையில் நிறுவனத்தினர் நடத்தினர். இந்நிகழ்ச்சியில் முதியவர்களை கௌரவித்து மேன்மைப்படுத்தி பரிசில்களை வழங்கியதோடு. இத்தினத்தை முன்னிட்டு பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற கட்டுரை. சித்திரம். பேச்சு முதலிய போட்டிகளில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப் பட்டன. இந்நிகழ்ச்சியில் வாழைச்சேனை பிரதேச செய லாளர் எஸ்.புண்ணிய மூர்த்தியும். உதவிச் கல்விப் பணிப்பாளர் திரு. ராஜரட்ணம் ஆகியோரும் கலந்து சிறப்பித் தனர்.

## பட்டத்தாரிகள் ஒன்றிய பொதுக்கூட்டம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றிய பொதுக்கூட்டம் நேற்று மட் மகாஜக் கல்லூரியில் சங்கத் தலைவர் என். பரமேஸ்வரன் தலமையில் நடந்தது. இக்கூட்டத்தில் பேசிய சங்கத்தலைவர் வேலையற்றப்பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதற்கான துரித நடவடிக்கையினை தான் மேற்கொண்டு வருவதாக இக்கூட்டத்திற்கு பங்கு பற்றிய வேலையற்ற பட்டதாரிகளுக்கு தெரிவித்தர்

1ம் பக்க தொடர்ச்சி

### குண்டு வெடிப்பில் இறந்தவர்களுக்கு உடனடி நிவரான கொடுப்பனவுக்கு உத்தரவு

அனாஸ்.

மூதூர் குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களுக்கான நிவார கொடுப்பனவாக உடனடியாக 2000 ரூபாவும் நட்ட ஈட்டுக் கொடுப்பனவாக 50,000 ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

இதன் முதற் கட்ட நிதியாக 10,000 ரூபா வழங்கப்படவுள்ளது. இதற்கான நிதியை புனர்வாழ்வு புணரமைப்பு அமைச்சு திருமலை அரச அதிபருக்கு அனுப்பிவைத்துள்ளது.

அரச அதிபரின் பணிப்புரைக்கு அமைய மூதூர் பிரதேச செயலாளர் ஏ . நடராஜா ,நிவாரண கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

சிறந்த விளம்பரத்திற்கு இன்றே நாடுங்கள் தினக்கதிர்

## இலங்கை முத்திரைக்கு கிராக்கி

வருடந்தோறும்சுமார் 15முத்திரைகள்இலங்கையில் வெளியிடப்படுகின்றன.இலங்கை முத்திரைகளுக்கு உலக அரங்கில் நல்ல மதிப்பு உண்டு. முத்திரை சேகரிப்போரின் கவனங்கள் கூடுதலாகஇலங்கையில்' வெளியிடப்படும் முத்திரைகளில் ஈர்க்கப்பட்டுள்ளன. முக்கிய நிகழ்வுகள், தினங்கள். பெரியோர்களை கௌரவித்தல் போன்றவைகளுக்காக முத்திரைகள் வெளியிடப்படுகின்றன. இலங்கை முத்திரைகள் உலகதரத்திற்கு உயர்ந்துள்ளதாக இலங்கை முத்திரை அமைப்பின் பணிப்பாளர் எச்.குமாரசிங்க தெரிவித்துள்ளார்.



தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) மட்டக்களப்பு மாவட்டம்
* வடக்கு கிழக்கு இணைந்த தாயகத்தை வலியுறுத்த * அவசரகால சட்ட நீடிப்புக்கு எதிராக வாக்களிக்க
* '' புலி'' களுடன் பேசி பொது இணக்கத்துக்கு வருமாறு அரசை வலியுறுத்த
வெளிச்சவீட்டு சின்னத்திற்கு வாக்களியுங்கள் !
X 4 5
பிரசன்னா - 4

சாந்தன் - 5

# பிறந்த திகதி தருமயோகம்.

## ஜோதிடம் ஏப்ரல் - 05

ஏப்ரல் மாதம்5-14-23ம் தேதியில் பிறந்தவர்களின் பலன்கள்:-

எண் **5** அதன் அதிபதி **புதன்** ஏப்ரல் 5இல் பிறந்தவர்கள் வியாழனின் ஆதிக்கத்தையும் 14-23இல் பிறந்தவர்கள் செவ்வாயின் ஆதிக்கத்தையும் பெற்றிருப்பர்.

எப்பொழுதும் ஒரே நிலையில் உள்ள வாழ்க்கையாக அமையாது. சிறந்த அறிவாற்றல் உடையவர்கள். அனைத்தையும் அறியவேண்டும் என்னும் ஆவல் கொண்டவர்கள்.எதையும் விரைவில்செய்துமுடிக்க வேண்டுமென்ற பேரவா உடையவர்கள். விவாதம் செய்வதில் திறமை பெற்றவர்கள். பழைமையை வெறுப்பவர்கள். புதியன புகுத்துவர். மிகுந்த ஆர்வம் கொண்டவர்கள்.புத்தகப் பிரியர். சிறந்த பேச்சாளர், எழுத்தாற்றல் உடையவர்கள். தனதுபேச்சால்அடுக்கு மொழியால் அனைவரையும் கவர்ந்திடும் ஆற்றலும் பெற்றவர்கள்.

தன்னம்பிக்கை வாழ்க்கையின் உயர்வுக்கு வழி என்று நம்பி அதனால் உயர்நிலை பெறுவீர்கள்.தோல்விகளைக் கண்டு துவளாமல் அவை வெற்றியின்ஆரம்பம் என நினைப்பதால்வாழ்க்கையில் தோல் விகள் வெற்றியாக மாறும்.

மதுப்பழக்கம் சூதாட்டம் குறுக்கு வழியில் செல்லும் நிலை .இவைகளால் கெட்டபெயரையும் சம்பாதிப்பீர்கள். பலரையும் கவர்ந்திடும் கவர்சியும் ஆற்றலும் பெற்றிருப்பீர்கள். திருமணத்திலும் சில சிக்கல்கள் ஏற்படும். வாழ்க்கையில் முழுத்திருப்தி பெறமாட்டீர்கள். மனம் திறந்து பேசுவதால் பல மறைமுக எதிரிகளையும் சம்பாதிப்பீர்கள். அனைத்து விடையங்களையும் அறியும் திறமைசாலிகள்.

செல்வநிலையில் உயர்வடைய பல சந்தர்ப்பங்கள் உங்களைவந்தடையும் அவைகளை தக்க சமயத்தில் பயன்படுத்திக் கொண்டால் பெரும் செல்வந்தர்களாகலாம். மேலும் சூது, மது, மாது. என்ற வழியில் பணம்விரையமாகாமல் நல்வழியில் செலவிட்டால் மிகவும் உயர்நிலை பெறுவது உறுதி.

மூளைக்கு அதிகம் வேலை கொடுப்பதால் விரைவில் களைப்படைகிறது. அதனால் பிற்காலத்தில் நரம்புத்தளர்ச்சி நோய்த்தாக்கத்துக்கு ஆளாக நேரிடலாம் அஜீரணக் கோளாறு. அல்சர் போன்ற வியாதிகளும் ஏற்படும். உணவுப் பழக்கத்தில் நேரம் தவறாமல் உணவு உட்கொள்ள பழகிக் கொண்டால் இந்த வியாதிகளை வருமுன் தடுக்கலாம். நேரத்துக்கு உணவு, உறக்கம். ஓய்வு இருந்தால் உற்சாகமாக வாழ முடியும்.

5-9-14-18-23-27ம் தேதிகள் எந்த ஆண்டு எந்த மாதமானாலும் யோகம் தரும் நாட்களாகும்.

உங்கள் வாழ்க்கையில் 5-9-14-18-23-27-32-36-41-45-50-54-59-63-68-72ம் வயதில் நினைவில் நிற்கக்கூடிய நிகழ்ச்சிகள் நடைபெறும்.

கூட்டு எண் 5ஆக வரும் நபர்களுடன் ஏற்படும் உறவு நல்லுறவாகஅமையும். வாழ்க்கைத் துணைவர்களின் எண்ணும் இதே எண்ணாகஇருவருக்கும் அமையுமானால் இல்லற வாழ்வு சிறப்படையும்.வர்ணம்:- சாம்பல் நிறம். எல்லா லேசான நிற உடைகளும் அதிர்ஷ்டம் தரும்.

இரத்தினம்:- வைரம் அதிர்ஷ்டம் தரும், தரிக்க முடியாதவர்கள்.மரகதம் தரிக்கலாம். நல்ல பச்சைக்கல்லை கண்ணாடி கிளாசில் உள்ள பாலில் பேரட்டால் பால் இளம் பச்சை நிறம் காட்டும். பசும்புல்லின் நிறம் கொண்டது. இக்கல் உடலில் படுவதால் நரம்புக் கோளாறு, நரம்புத்தளர்ச்சி, கனவில்ஸ்கலிதமாவது இவைகளைப் போக்கிசுகத்தையும், சந்தோஷத்தையும் தரும்.

**வே. தவராசா**

# ஜனாதிபதி உத்தரவிட்டதாக கூறியும் நெல் கொள்வனவு செய்யப்படவில்லை

## கல்முனை விவசாயிகள் கவலை


(நற்பிட்டிமுனை நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் ஜனாதிபதியின்விஷேட பணிப்புரையின்பேரில் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்யும் பொருட்டு 15கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், கிலோ 13ரூபா வீதம் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நெல் கொள்வனவுசெய்யப்பட இருப்பதாகவும் வெகுசன தொடர்பு சாதனங்கள்மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

கல்முனைப் பகுதியில் அனேக விவசாயிகளின் நெல்லை முறையாக கூட்டுறவுச்சங்கம் மூலம்கொள்வனவு செய்யப்படாமல்இருப்பது விவசாயிகளுக்கு பெருங் கவலையை உண்டுபண்ணியுள்ளது. இப்பகுதியிலுள்ள கல்முனை, சாய்ந்தமருது ஆகிய கூட்டுறவு சங்கங்கள் மூலம் சுமார் 15 இலட்சத்திற்கு உட்பட்ட நெல்லேகொள்வனவு செய்யப்பட்டிருப்பது குறித்து விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கல்முனை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் மூலம் தலா 50 மூடை வீதம் 16பேரிடம் மட்டுமே நெல்கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. நெல்லை விற்க முடியாத நிலையில் விவசாயிகள் தாம் பெற்ற கடன்களை மீளச் செலுத்த முடியாதநிலையில் திண்டாடுவதாகவும்,அம்பாறை மாவட்டத்தில் திருப்தியான முறையில் நெல் கொள்வனவு இடம்பெறவில்லை எனவும், எதிர்வரும் காலங்களில் வேளாண்மைச் செய்கையில் ஈடுபட முடியாதுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# பாகிஸ்தான் பயணம்



மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியின்-பட்டதாரி ஆசிரியரும், பேருவளை ஜாஆமிய நளீமியா இஸ்லாமிய பட்டதாரியுமான அஷ்-ஷெய்க் அன்சார்பழீல் மௌலானா அவர்கள்சென்றவாரம் பாகிஸ்தான் பயணமானார். இஸ்லாமபாத்திலுள்ள சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் வருடாந்தம் நடைபெறும் சர்வதேச இஸ்லாமிய தலைமைத்துவ பயிற்சியில் கலந்து கொள்ளவே அவர் பாகிஸ்தான் சென்றுள்ளார். இவருடன் இலங்கையில் மொத்தம் மூன்று பேர் இப்பயிற்சியில் கலந்து கொள்ளச் சென்றுள்ளனர்

சர்வதேச முஸ்லீம் சமூகத்தின்சிறுபான்மை முஸ்லிம்களுள் ஓர்அங்கமாகக் கருதப்படும் இலங்கை முஸ்லீம் சமூக கலாசார, சமூக சமய, அரசியல் நிலமைகள்தொடர்பாக ஆய்வறிக்கையைஆசிரியர் சமர்ப்பிக்கவுள்ளார். மேலும் ஜாமிஆ நளீமியின்இஸ்லாமிய வளாகத்தின் பழைய மாணவர் அமைப்பான ராபித்துன் நமீமியயின் நலன்களின்மேம்பாடு தொடர்பாகவும் இவர்பாகிஸ்தான் உயர்மட்ட உலமக்களுடன் கலந்துரையாடவுள்ளார்.

தேசிய கல்வி நிறுவக வளவாளராகவும். மருதமுனை ஜம்இயதுல் உலமா. மர்கத்துல் த..லீ மில் இஸ்லாமி ஆகிய அமைப்புக்களின் செயலாளராகவும்,பேராதனைப் பல்கலைக் கழக இஸ்லாமியநாகரீகத்துறை முதுநிலை மாணவராகவும் திகழும் இவர் ஓய்வுபெற்ற முன்னாள் வட்டாரக் கல்விஅதிகாரிஅல்-ஹாஜ் ஐ.எம்.எல். எம்.பழீல் மௌலானா ஜே.பி அவர்களின் இரண்டாவது புத்திரராவார்.

## கௌரவிப்பு விழா

(ஜாலீல்)

40வருடங்களுக்கு மேலாகச் சமூக சேவையாளராகவும்.19 வருடங்களுக்குமேலாககாதி நீதிபதியாகவும் கடமையாற்றி ஓய்வு பெற்ற எம்.பி.எம்.மீராசாகிபு (ஜே.பி.) (அகில இலங்கை சமாதான நீதிவான்) அவர்களின் சேவை நலனைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழா30.09.2000சனிபி.ப. 4.00 மணிக்கு காத்தான்குடி மீராபாலிகா மண்டபத்தில்அதிபர் எம்.எம்.எம் .மஹ்றூப் கரீம் அவர்களின் தலைமையில்நடைபெற்றது.சட்டத்தரணிஎம்.ஐ.எம் .நூர்தீன்(தலைவர் முதியோர் இல்லம்.காத்தான்குடி) வரவேற்புரையினை நிகழ்த்தினார்கள்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக:-திரு.வே. கனகராஜா(உதவிப்பதிவாளர் நாயகம்), திருஎஸ்.முத்துக்குமாரன (இளைப்பாறிய உதவி பதிவாளர்நாயகம்) அவர்களும்

கௌரவ விருந்தினர்களாகசட்டத்தரணி-ஏ.எல்.ஜவாத், பிரதேசசெயலாளர்- எம்.சி.எம்.சரீப், காதி நீதிவான்- எம்.டி.எம்.காலித்

இன்னும்பல பிரமுகர்கள் அதிதிகளாக கலந்து கொண்டு வாழ்த்துபா, சொற்பொழிவுகளினை நிகழ்த்தினார்கள்.

# ஆங்கில தினப் போட்டியில் புனித மிக்கேல் முதலிடம்

(வே.தவராசா)

வடகிழக்கு மாகாண மட்டத்திலான ஆங்கிலதினப் போட்டிகள்சென்றவாரம் திருமலையில்நடைபெற்றது. அப்போட்டிகளில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி வெற்றிகளை பெற்றுள்ளது.

மேலும்கட்டுரைப் போட்டியிலும் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளதோடு நாடகப்போட்டியிலும் முதலாம் இடத்தைப் பெற்று மாணவர்கள் கல்லூரிக்கும் பெருமை சேர்த்துள்ளார்கள்.

"றோமியோ ஜுலியட்" எனும்ஆங்கில நாடகமே மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி மாணவர்களால் நடித்துக்காட்டப்பட்ட நாடகமாகும்.

சென்ற ஆண்டு தேசிய ரீதியில் நடைபெற்றநாடகப் போட்டிகளிலும், கட்டுரைப் போட்டியிலும் மேற்படி கல்லூரி முதலாம் இடங்களைப்பெற்று விருதுகள் பெற்றது குறிப்பிடத்தக்கது.

# மூதூர் கணணி வள நிலையம் கொள்ளையடிக்கப்பட்டது.

(மூதூர் நிருபர்)

கடந்த இரவு 8.30 மணியளவில் மூதூர் மத்திய கல்லூரியில் இயங்கி வந்த கணணி வள நிலையத்திலிருந்த9 கொம்பியூட்டர்கள் தட்டச்சு இயந்திரம் ஒன்று அம்பிலிவயர் ஒன்று ஆகியன இனம்தெரியாதோரால் கொள்ளையடிக்கப்பட்டுவிட்டன.

கணணி வள நிலையம் கல்லூரி அதிபர் அலுவலகம் விஞ்ஞானஆய்வுகூடம் உடைக்கப்பட்டது.பற்றிவிசாரனை நடைபெற்றுக் கொண்டிருப்பதாக கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாண நிர்வாகத்தின் கீழ் வவுனியா, யாழ்ப்பாணம், அக்கரைபற்று, மூதூர் ஆகியகல்வி வலயங்களில் மேற்படி கணணி நிலையங்கள் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

மூதூர் வலையக்கல்வி நிர்வாகத்தின் கீழ் அமைக்கப்பட்ட கணணி வள நிலையமே மூதூர் மத்திய கல்லூரியில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. இக் கொள்ளை சம்பந்தமாக மூதூர் வாசிகள் மிகவும் மனக்கவலை கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.


அழகுசுப்பிரமணியம் சத்தியநாதன்

ரசியல் விடிவானில் ஓர் இளஞ்சூரியன்







தமிழர் விடுதலைக் கூட்டணி

மட்டக்களப்பு மாவட்டம்





மட்டக்களப்பு மாவட்டம் கல்வி, சுகாதாரம். தொழில்நுட்பம், மீன்பிடி. வீடமைப்பு போன்றவற்றில் துரித அபிவிருத்தி பெற

எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் வை ஆதரிப்போம்.

எம். எல். ஏ. எம் ஹிஸ்புல்லாஹ் தேசிய ஐக்கிய முன்னணி

# ஏன் எமக்கு வாக்களிக்க வேண்டும் சில வேட்பாளர்களின் கருத்துக்கள்

## மக்கள் எங்களுடனேயே இருக்கின்றார்கள்



டக்ளஸ் தேவாநந்தா
யாழ்ப்பாண வேட்பாளர் ஈ.ம.ஜ.க.

யாழ்ப்பாண மக்கள் ஈழ மக்கள் ஜனநாயக கட்சிக்கு வாக்களிக்கவே விரும்புவர். ஏனெனில் இதன் கொள்கைளகளும் அணுகு முறைகளும் நியாயமானவை யாகும்.

நாங்கள் தெரிவு செய்யப்பட்டால் அதிகாரத்தில் உள்ள முக்கிய பிரச்சனைகளைத் தீர்க்கக்கூடிய கட்சிக்கே ஆதரவு வளங்குவோம். இதனை பொ.ஐ.மு அரசு செய்யும் என நாங்கள் உணர்கிறோம். தினம் தினம் தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சனைக்கு எங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இதற்கான தீர்வு அமைக்கப்பட்டுள்ளது. நாங்கள் எங்களது பாராளுமன்ற நடவடிக்கைகளை எங்களது விஞ்ஞாபனத்தின்படி முன்னெடுப்போம்.

கடந்த 10 வருடங்களாக நாங்கள் மக்களோடு சேர்ந்து உழைத்துள்ளோம். எனவே அவர்கள் எங்களுடனேயே இருக்கின்றார்கள்.

## நாங்கள் நிரூபிக்கப்பட்ட வெற்றியின் பாதைகளை அடைந்துள்ளோம்



திலக் மறப்பன்ன
ஐ.தே.க தேசியப்பட்டியில
பிரதிநிதி

ஐ.தே.கட்சியே நாட்டின் அபிவிருத்தியில் வெற்றியின் பாதைகளை அடைந்து நிரூபித்துள்ள ஒரேயொரு கட்சியாகும். அதே வேளையில் ஏழைகளையும் கவனத்தில் எடுத்தோம். வெளி நாட்டு மூலதனங்கள் மீதும். தனியார் நிறுவனங்கள் மீதும் முக்கிய கவனமெடுத்தோம். எங்களது குறிக்கோளானது நாட்டு மக்களுக்குள் நவீன தொழிநுட்பத்தை புகுத்தியும் மனித செயற்பாடுகளை முன்னேற்றியும் 21ம் நூற்றண்டின் உலக நடைமுறைக்கு மக்களை சித்தப் படுத்துவதேயாகும்.

ஐ.தே.கட்சி நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை நிர்வகிக்க ஓர் தகுந்த ஒழுக்கமான குழுவைக் கொண்டுள்ளது. இதனால் உற்பத்திகள் விரைவில் உயரும்.

மேலும் ஐ.தே.கட்சி நாட்டின் இனங்களுக்கு இடையேயான பிரச்சனையை ஓர் தெளிவான பேச்சுவார்த்தை மூலம் அணுகி அரசியல் தீர்வைக் காண்பதற்கு பொறுப்பேற்றுள்ளது.

அரசாங்கத்தில் ஐ.தே. கட்சியினராயின் எப்போதும் சட்டத்தையும், ஒழுங்கையும் முன்னெடுத்து ஓர் ஸ்திரமான வாழ்வுக்கு வழிவகுப்பர். எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேர்மையையும் கடின உழைப்பையும், ஒழுக்கத்தையும், நம்பி நடப்பவராகும்.

தொகுப்பு :-
நாலாவான்

## அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு எதிராக நாமே வாக்களித்தோம்



ரெலோ பிரசன்னா

- (கொழும்பு) - முன்னாள் போராளி குழுக்களான தமிழ் கட்சிகளில் தமிழீ விடுதலை இயக்கமான டெலோ மட்டுமே அவசர கால நீடிப்புக்கு எதிராக வாக்களித்து வருவதோடு தமிழ் மக்களின் அபிலாசைகளை தீர்க்காத தீர்வுத் திட்டத்தையும் நிராகரித்தது.

அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் இதற்காக அரசாங்கம் யுத்த நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட டெலோ முதன்மை வேட்பாளர் நி.இந்திர குமார் பிரசன்னா தெரிவித்தார்.

மட்டக்களப்பு நாலடி தேர்தல் பிரச்சார கூட்டத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இக் கூட்டத்திற்கு எஸ்.ஞானப்பிரகாசம் தலைமை வகித்தார்.

தேர்தலில் தமிழ் வாக்குகளைப் பெறுவதற்கு கலாசாரங்களை கேலிபண்ணும் இழிவுபடுத்தும் பிரசாரங்களும் வெளியிடப்படுகின்றன என்று வேட்பாளர் பிரசன்னா தெரிவித்தார்

## நாங்களே சக்திவாய்ந்தவர்களாக இருப்போம்



வாசுதேவ நாணக்கார
இடதுசரி ஜனநாயக இரத்தினபுரி

மக்கள் இவ் அ... தினதும், ஐ.தே.கட்சி கொள்கைகளுக்கும் கு... சிங்கள ஆதிக்கத்திற்கும் ...க வாக்களிப்பார்கள் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

தற்போதைய நாட்டின் பொருளாதாரமானது பெருவாரியான மக்களுக்கு விரோதமான முறையில் நிர்ப்பந்திக்கப்பட்டு யுத்த தந்திரங்களுக்காகவே கடந்த 22 வருடங்களாக செயற்பட்டு வந்துள்ளது! எமது திட்டத்தின்படி பொருளாதாரமானது அரச தலையீட்டோடும், அரச நிர்வாகத்தோடும் தேவையான உணவுப் பொருட்களும் ஏனைய தேவையான பொருட்களும் நிபந்தனையின் பேரில் சந்தைப் படுத்தப்பட்டு பகிர்ந்தளிக்கப்படும்.

பொருட்களின் விலைகளுக்கு அரசாங்கமே உத்தரவாதமாக இருக்க நாம் தீர்மானித்துள்ளோம்

வட கிழக்கின் சுமூக நிலையை மீண்டும் கொண்டுவர அதில் சிரத்தையுள்ள கட்சியினருடன் ஆலோசிக்க முடிவெடுத்துள்ளோம்.

20 வருட காலமாக வழக்கில் இருந்த கல்விக்கும், சுகாதாரத்திற்குமான செலவுப் பகிர்வு விகிதம் அதிகப்படுத்தப்பட நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

நாங்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டால் யார் அரசாங்கத்தை அமைந்திருந்தாலும் அவர்களோடு எழுச்சியுடனும் மிக்க வினைத்திறனுடனும் தலையிட்டு அவர்களை நாட்டிற்கும், நாட்டு மக்களின் பாலும் அக்கறையோடு செயல்பட அழுத்தங்களைக் கொடுப்போம்.

நாங்கள் நிகழ்கால அரசினதும், எதிர்கால சரியான அரசாங்கத்தினதும் செயற்பாடுகளை வெளிச்சத்திற்கு கொண்டு வருவோம். நாங்கள் எவரோடும் இணைந்து செயற்பட மாட்டோம். ஆனால் மிகவும் எழுச்சியோடு செயற்படுவோம்.

## பயப்படாது வாக்களியுங்கள் சமாதானத்தை கொண்டு வருபவர்களை தேர்ந்தெடுங்கள்

- திருமலை.மட்டுநகர் ஆயர் -

நாம் எமது வாக்குரிமைகளை பயப்படாது பாவிக்க வேண்டும். எமக்கு சமாதனத்தை பெற்றுத்தருபவர்களையே நாம் தெரிவு செய்ய வேண்டும் என்று திரும்லை - மட்டுநகர் ஆயர் டாக்டர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையவர்கள் ஞாயிறு அன்று மட்டக்களப்பு அமிர்தழி இப்பலேந்தி அன்னை ஆலயத் திருவிழாத் திருப்பலியில் மறையுரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் வானத்தை வில்லாக வளைப்போம். மணலைக்கயிறாகத் திரிப்போம் என்று கூறிக்கொண்டு ஊர். பேர் தெரியாதவர்களெல்லாம் வேட்பாளர்களாக வருகிறார்கள் நீங்கள் அனைவரும் கடந்த காலத்தைப் பற்றிச் சிந்தியுங்கள். உங்களுக்கு சமாதானம் கொண்டு வருபவர்களை மனச்சாட்சியின்படி ஆதரியுங்கள். இலங்கை நாட்டை தேவ அன்னையிடம் ஒப்படைத்துள்ளோம். எனவே லங்கா மாதாவிடம் எனது நாட்டின் அமைதிக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள். இன்று சின்னத் திரேசம்மாளின் திருநாளும்கூட. அத்துடன் இன்றைய நாளை இளைஞர்களுக்காக நாம் அர்ப்பணித்துள்ளோம். இவ்வாலயத்தைக் கட்ட உதவிய அனைவருக்கும் நாம் நன்றிடையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றும் கூறினார்.

இக் கூட்டுத்திருப்பலியில் பலர் புதுநன்மை உறுதிப்பூசுதல் என்பனவற்றைப் பெற்றுக் கொண்டனர். கொடியிறக்கத்தின் பின்னர் மட்டக்களப்பு வாவியிபடகொன்றில் அன்னையின் திருச்சொரூபம் சுற்றுப்பிரமாக கொண்டு செல்லப்பட்டது. இவையாவும் மிகவும் பக்தி பூர்பவமாக இடம் பெற்றன.

அருபணி தேவராசா அடிகள் நன்றியுரையாற்றினார்.

## "எனக்கு கணவர் இருக்கிறார் என்னால் முடியாது"

ஒலிம்பிக்கில் 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் சுசந்திக்கா மூன்றாவது இடத்துக்கு வந்து வெண்கலப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்ட செய்தி நாம் முன்னர் அறிந்ததே.

இதைத் தொடர்ந்து சுசந்திக்காவை அட்றியின் வொஜனரோஸ்கி என்ற நிருபர் பேட்டி கண்ட போது அவர் அதிர்ச்சியூட்டும் தகவல்களை வெளியிட்டார்.

"உங்கள்நாடு உங்களது சாதனையையிட்டு பெருமைப்படும்" என்று நிருபர் கூறியபோது என்னால் அதை விபரிக்கமுடியாது. உங்களால் அதை விளங்கிக் கொள்ள முடியாது. அவர்கள் எனக்கு தந்ததெல்லாம் தொந்தரவு தான் என்றார்.

"அப்படிஎன்ன தொந்தரவுகள் தந்தார்கள்?" என்று நிருபர் கேட்டபோது

"என்னைத்தான் தொந்தரவு செய்தார்கள். அதாவது பாலியல் இம்சை முயற்சிதான். 1997இல் நான் உலக சம்பியன் பட்டத்தை வென்ற போது பெரிய பிரமுகர் ஒருவர் என்னுடன் பாலியல் தொடர்பு கொள்ள முயன்றார் எனக்கு கணவர் இருக்கிறார் நான் மறுத்து விட்டேன்" என்றார்.



கல்முனை சனிமவுன்ட் விளையாட்டுக்கழகம் கல்முனையில் நடாத்திய மர்ஹீம் எம்.எச்.எம்.அஸ்ரவ் நினைவுப் பேருரைக் கூட்டத்தில் சட்டத்தரணி எம்.எஸ்.ஹாரிஸ் உரையாற்றும் போது பிடிக்கப்பட்ட படம் (படம்- முபா)

## ஆன்மீகம் அறிவோம்

ஒவ்வொரு நாளும் புதியவனாவேன்என்று முடிவெடுக்க வேண்டும். தோற்றால். தவறினால்அவைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். இறைவன் இருக்கின்றார். எல்லாவற்றையும் காண்கிறார் என்றும் உண்மையில் நம்ப வேண்டும். இறைவனது துணையை, அருளைக்கேட்க வேண்டும். "ஓராதார் உள்ளத்து ஒளிந்திருப்பவனாகிய இறைவனை, வினையேன் அழுதால் உனைப் பெறலாம்" என்பதற்கேற்ப, பாவியான அகஸ்ரீன் நெஞ்சக் கனகல்லும் நெக்குருகக் கரைந்து தீவிரமாக அழுதார். இறைவனும் அவரை மீட்டார்.

"உனக்கு நீயே துரோகியாகிவிடாதே உன்னுடைய பலவீனத்தை ஒப்புக்கொள். உன்னுள்இறைவன் இருக்கின்றார். உன்னுடைய தவறுகளை நீ ஒப்புக் கொண்டால். இறைவன் உன்னை மன்னிப்பார். நீயும் பேருண்மையை உணருவாய்" என்று குருதேவர் பரமஹம்சர் அருளியுள்ளார்.

ஆகவே நம்மையும் நமது பலவீனங்களையும் ஏற்றுக்கொள்வோம். தவறுவது மனித குணம். திருந்துவது தெய்வகுணம்என்பதை ஏற்றுக் கொள்வோம். நாளும் புதிதாய் மாறி. புது மணம் கமழ. புதுயுகம் படைக்க வீறு நடைபோடுவோம்.

அருட்.சகோ.ஞா.மரியநாதன்

## விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு

(எஸ்.எம்.அறூஸ்)

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் அட்டாளைச் சேனை பிரதேச செயலகத்தில் பதிவுசெய்யபட்டுள்ள விளையாட்டுக்கழகங்களிற்கு வழங்கப் பட்டவிளையாட்டு உபகரணங்களை முன்னாள் பாரளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இணைத்தலைவர்களில் ஒருவருமான றவூப்ஹக்கீம் அவர்களினால் விளையாட்டுக்கழகத் தலைவர்களிடம் கையளிக்கப்பட்டது.

இவ்விளையாட்டு உபகரணங்களை பெற்றுக் கொடுத்த மறைந்த அமைச்சர் மர்ஹீம் அஸ்ரப் அவர்கள் தனது கடைசிவிழாவாக அட்டாளைச் சேனையில்வைத்து விளையாட்டுக் கழகங்களிடம் கையளிக்க விருந்தார்.என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## ஒலிம்பிக் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற நாடுகளின் பதக்க விபரம் பின்வருமாறு

அமெரிக்கா 39தங்கம் 25வெள்ளி 33வெண்கலம், பெற்று முதலாவது இடத்திற்கும். ரஷ்யா 32தங்கம் 28வெள்ளி. 28வெண்கலம் பெற்று இரண்டாவது இடத்துக்கும். சீனா 28தங்கம்16வெள்ளி. 15வெண்கலம் பெற்று மூன்றாவது இடத்துக்கும் வந்தன.

இப்போட்டியில் இலங்கை 1 வெண்கலப்பதக்கத்தையும். இந்தியா1 வெண்கலப்பதக்கத்தையும் பெற்றுக் கொண்டன.




# கென்ய கிரிக்கட் போட்டி முதன் முறையாக இணையத்தளம் மூலம் நேரடி அஞ்சல்

(நமது நிருபர்)

கென்யாவில் இம்மாதம் 3ஆம் திகதியிலிருந்து 15ஆம் திகதி வரை நடைபெறும் நொக்அவுட் கிரிக்கட் தொடர் போட்டிகளை கிரிக் ' இன்போ கொம் எனும் பிரபல இணையத்தளம் நேரடி அஞ்சல் செய்யவுள்ளது.

சர்வதேச கிரிக்கட் சபையால் நடாத்தப்படவுள்ள இப்போட்டியின்அஞ்சல் நிகழ்வுகளை வழங்குவதற்கான அனுமதியைசர்வதேச விளையாட்டுக்குழுவும்.செய்தித் திணைக்களமும் கிரிக்இன்போவிற்கு வழங்கியுள்ளன.

சர்வதேச கிரிக்கட் சபையுடன்கிரிக்இன்போ அண்மையில் செய்து கொண்ட உடன்பாட்டின் கீழ் சர்வதேச கிரிக்கட் சபையின் சார்பாக இப்போட்டிகளை நேரடி அஞ்சல்செய்யவுள்ள ''கிரிக் இன்போ'' ஏற்கனவே சர்வதேச கிரிக்கட்சபையின் இணையத்தளம் மற்றும் டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற 7 கிரிக்கட் விளையாடும் நாடுகளின் இணையத்தளங்களுடன் இணைந்து ஒலிபரப்பில் சேவையாற்றி வருகிறது.

சர்வதேச புகழ்பெற்ற கிரிக்கட் வர்ணனையாளர்களான மேற்கிந்தியாவின் கொரின்குரொப் இங்கிலாந்தின் கிறிஸ்புரோட், தென்னாபிரிக்காவின் நீல்மான் தேலே ஆகியோர்கள் மூலம் மேற்கொள்ளப்படவுள்ள இந்நேரடி அஞ்சலுக்கு இணையத் தளம் ஊடான ஒன்லைன் முறை ஆதரவும் வழங்கப்படவுள்ளது.

சர்வதேச கிரிக்கட் சபையின் நிறைவேற்று அதிகாரி டேவிட் ரிச்சாட் இது பற்றி தெரிவிக்கையில் கிரிக்கட் விளையாட்டுக்குரசிகர் தொகையை அதிகரிப்பதை ஒரு நோக்கமாகக்கொண்டு நடாத்தப்படவுள்ள இக்கிரிக்கட் தொடரில் கிரிக்கட் இன்போவுடன் இணைந்து செயலாற்றுவதன்மூலம் இந்நோக்கத்தை இலகுவில் அடைய முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

கிரிக்இன் போவின் நிறைவேற்று அதிகாரி சிமொன்கிங் தெரிவிக்கையில்

1998ம்ஆண்டு டாக்காவில் நடைபெற்ற மினி உலகக்கிண்ண கிரிக்கட் போட்டிகளில் கிரிக்இன்போவின் சிறந்த சேவைகளுக்காகவே கென்ய போட்டிகளுக்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகவும் இங்கும் தமது திறமைகளை வெளிகாட்டப்போவதாகவும் தெரிவித்ததுடன் கிழக்கு ஆபிரிக்காவிலிருந்து இணையத்தளமூடாக மேற்கொள்ளப்படவுள்ள முதல் நேரடி அஞ்சல் நிகழ்வு இதுவெனவும் குறிப்பிட்டார்.

போட்டி முடிவுகளின் போது ரசிகர்கள் ஈமெயில் முகவரியூடாக வர்ணனையாளர்களுடன்தொடர்புகொண்டு வேண்டிய தகவல்களைப்பெற்றுக் கொள்ளலாம்என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி போட்டியில் 11 நாடுகள் பங்குபற்றுகின்றன.

¡996ம் ஆண்டு உலகக் கிரிக்கட் போட்டியில் அரை இறுதிப் போட்டியில் விளையாடிய அவுஸ்திரேலியா. பாகிஸ்தான். தென்னாபிரிக்கா. நியூசிலாந்து ஆகியன கால் இறுதிப்போட்டியில் விளையாடுகின்றன.

இந்தியா, கென்யா, இலங்கை. மே.இந்தியத் தீவுகள். இங்கிலாந்து. பங்களாதேஷ், சிம்பாவே ஆகிய அணிகள் தகுதிச் சுற்றில் வெற்றிபெற்ற பின்பே கால் இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெறும்.

நேற்று நடைபெற்ற போட்டியில் கென்ய அணியை எதிர்த்து இந்தியஅணி விளையாடும். இன்று புதன்கிழமை இலங்கை அணியை எதிர்த்து மே.இந்திய தீவுகள் விளையாடும்.

5ம் திகதி இங்கிலாந்து எதிர் பங்களாதேஷ் 7ம் திகதி அவுஸ்திரேலியா எதிர் இந்தியா. கென்யா 8ம் திகதி பாகிஸ்தான் எதிர்இலங்கை, மே.இந்தியத் தீவுகள் 9ம் திகதி சிம்பாவே எதிர் நியூசிலாந்து.10ம்திகதி தென்னாபிரிக்கா எதிர் இங்கிலாந்து. பங்களாதேஷ்.11ம்திகதி முதலாவது அரை இறுதி ஆட்டமும், 12ம் திகதி இரண்டாவது இறுதி ஆட்டமும் நடை பெறும். 15ம் திகதி இறுதிப் போ டி இடம்பெறும்

## வாசகர் நெஞ்சம்

# சோதனைச் சாவடியில் கையொப்பம் போட்ட பின்பே ஆசிரியர்கள் பாடசாலைக்குச் செல்லும் பரிதாபம்

செங்கலடி கறுத்தப் பாலத்தினூடாக இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிப் பாடசாலைகளுக்குச் செல்லும் ஆசிரியர்கள் செங்கலடி கறுத்தப்பால இராணுவச் சோதனைச் சாவடியில் வைத்து கையொப்பமிட்ட பின்பே மேற்கொண்டு பிரயாணத்தை தொடரும் இக்கட்டான நிலை ஏற்பட்டிருப்பதை நினைந்து ஆசிரியர்கள் தலையில் கையை வைத்தபடி உள்ளார்கள்.


சுமார் 25 ஆசிரியர்கள் இவ்விதம் துன்பப்படுவதை எவரும் கவனிப்பதாகத் தெரியவில்லை.

சோதனைச் சாவடியில் கையொப்பமிட்டு சோதனைகள் யாவும் முடிவுற்ற பின்பு இந்த ஆசிரியர்கள் நேரம் தாமதித்தே பாடசாலைகளுக்குச் சமூகம் கொடுக்க வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக 8 மணிக்கு ஆரம்பமாக வேண்டிய பாடசாலைகள் 9மணிக்கு பிறகே ஆரம்பமாகின்றன. இதனால் நேரம் வீணாகக்கரைவது மாத்திரமல்லாது மாணவர்களின் கல்வியும் பாதிப்படைகிறது.

ஆகவே சோதனைச் சாவடியில் கையொப்பம் இடாமல் வழமைபோல ஆசிரியர்கள் தங்கள்கடமைக்குச் செல்ல உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*க.சதீஸ்குமார்*
*செங்கலடி*




1949 ஆம் ஆண்டில் ஜெனிவா உடன்படிக்கைகளில்

## பொது உறுப்புரை 3

### *சர்வதேசத் தன்மைத்தானவையாக இராத ஆயுத மோதல்கள்*

உயர் ஒப்பந்தத் திறத்தவர்களின் ஆள்புலத்தில் சம்பவிக்கும் சர்வதேசத் தன்மைத்தானவையாக இராத ஆயுத மோதலின்போது மோதலில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு தரப்பினரும் ஆகக்குறைந்தபட்சம் பின்வரும் ஏற்பாடுகளைப் பின்பற்றுவதற்குக் கடமைப்பட்டாதல் வேண்டும்.

1. ஆயுதங்களை கீழே வைத்துள்ள, மற்றும் நோய், காயங்கள், தடுப்புக்காவல் அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக போர் செய்வதனை இடைநடுவில் நிறுத்திக்கொண்ட ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர்கள் உட்பட மோதலில் தீவிரமாகப் பங்குபற்றாத ஆட்கள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இனம், நிறம், மதம் அல்லது நம்பிக்கை, பால், பிறப்பு அல்லது செல்வம் என்பவற்றின் அடிப்படையில் அல்லது இவற்றையொத்த வேறுவித்தியாசத்தின் அடிப்படையில் எவ்விதமான பாதகமான வேறுபாடும் காட்டப்படாமல் மனிதாபிமானத்துடன் நடத்தப்படல்வேண்டும்.

   இக்குறிக்கோளை எய்தும் விதமாக , பின்வரும் செயல்கள் மேலே கூறப்பட்ட ஆட்கள் தொடர்பில் எந்நேத்திலும் எத்தன்மையான இடத்திலும் தடுக்கப்பட்ட செயல்களாதலால், தடுக்கப்பட்ட செயல்களாக இருத்தல் வேண்டும்

   (அ). ஒருவரின் உயிருக்கும் உடலுக்கும் எதிரான வன்முறை. குறிப்பாக எல்லாவகையான உயிர்க்கொலை, உறுப்புச்சேதம், கொடூரமாக நடத்தல் மற்றும் சித்திரவதை.

   (ஆ). பணயக்கைதிகளாகச் சிறைபிடித்தல்,

   (இ). சுயகௌரவத்தின் மீதான அவமரியாதையான நடத்தைகள், குறிப்பாக இழிவுபடுத்தும் விதமாக, மற்றும் தரக்குறைவாக நடத்துதல்.

   (ஈ). நாகரீகமுள்ள மக்களினால் இன்றியமையாதவையென அங்கீகரிக்கப்பட்ட சகல நீதிமுறையான உத்தரவாதங்களையும் அளித்து, முறையாக அமைத்துருவாக்கப்பட்ட நீதிமன்றம் ஒன்றினால் எடுத்து மொழியப்பட்ட முன்னைய தீர்ப்பு ஒன்றுமில்லாமல் தண்டனைகளை விதித்தலும் மரணதண்டனைகளை நிறைவேற்றலும்.

2. காயப்பட்டவர்களும், நோய்வாய்ப்பட்டவர்களும் தேடிக்கண்டுபிடிக்கப்பட்டுப் பராமரிக்கப்படுவர்.

செஞ்சிலுவை சர்வதேசக்குழு போன்ற பாராபட்சமற்ற மனிதாபிமானக் குழுவொன்று மோதலில் ஈடுபட்டுள்ள திறந்தவர்களுக்கு அதன் சேவைகளை வழங்க முன்வரலாம்.

மோதலில் ஈடுபட்டுள்ள திறந்தவர்கள் தற்போதைய உடன்படிக்கையின் ஏனைய ஏற்பாடுகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றின் ஒரு பகுதியை சிறப்பு உடன்படிக்கையின் மூலம் வலுவுக்குக்கொண்டுவர மேலும் முயற்சிகள் செய்தல் வேண்டும்.

முற்போன்ற ஏற்பாடுகளை பிரயோகிப்பது மோதலில் ஈடுபட்டுள்ள திறந்தவர்களின் சட்ட தராதரத்தை எவ்வகையிலும் பாதிக்கப்படாது.

# தலைமை வேட்பாளர் இல்லாமையினால் கடிதங்கள் தேக்கம்

## முகவர் நியமனத்திலும் தடங்கல்

(நமது நிருபர்)

**தேசிய ஐக்கிய முன்னணியின் மட்டக்ளப்பு மாவட்ட தலைமை வேட்பாளர் செல்லையா இராசதுரைக்கு அனுப்பிவைக்கப்பட்ட தேர்தல் தொடர்பான சகல உத்தியோக பூர்வமான கடிதங்களும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்திற்கும் திரும்பி விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.**

இக்கடிதங்கள் யாவும் தற்போது மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் பாதுகாப்பாக இருப்பதாக கூறப்படுகிறது. தேசிய ஐக்கிய முன்னணி முதன்மைவேட்பாளருடன் தொடர்பு கொள்ள முடியாத நிலை இருப்பதாக தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அதே நேரம் வாக்கடுப்பு நிலைய முகவர் நிறுவனம் வாக்கெண்ணும் நிலைய முகவர் நியமனம் தொட்ர்பான விண்ணப்பப்படிவங்களை தேசிய ஐக்கிய முன்னணி முதன்மை வேட்பாளர் பெற்றுக்கொள்ளவில்லை என தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றது.

இதே நேரம் தேசிய ஜனநாயக முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் தொடர்பான அதிகாரத்தினை முதன்மை வேபானருக்கு பதிலாக எம். எல் ஏ.எம் ஹிஸ்புல்லாவுக்கு வழங்க தேசிய ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் றவூவ் . ககீம் அகிம் மாவட்ட தோதல் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கேட்டுள்ளார். தேர்தல் சட்டத்தில் இடமில்லாத காரணத்தினால் இதனை தேர்தல் அலுவலகம் நிராகரித்துள்ளது..

### பகிடிவதை ஆறு மாணவர்கள் இடைநிறுத்தம்.

( நமது நிருபர்)

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் அறுவர் பகிடிவதை புரிந்த. காரணமாக மூன்று மாத காலம் இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

மேற்படி மாணவர்கள் மூன்று மாதங்களுக்கு விரிவுரைகளில் கலந்து கொள்ள முடியாது என யாழ் பல்களைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

### செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினருக்குச் சொந்தமான மூன்று வாகனங்கள் சேதம்

(திருமலை நிருபர்)

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினருக்குச் சொந்தமான மூன்று வாகனங்கள் நேற்று முந்தினம் பகல் மூதூர் நகரில் ஆர்ப்பாட்டக் காரர்களால் சேதமாக்கப்பட்டன என்று அவ்வமைப்பின் பேச்சாளர் ரார்சா குணவர்த்தனா தெரிவித்தார். சனிக்கிழமை இரவு இனந்தெரியாதவர்களினால் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில இருநது எடுததுச செல்லப்பட்ட கணணிகளை மூதூரில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் பெற்றுத்தரவேண்டும் எனக்கோரி, இன்று அந்த நகரத்தில் உள்ள பாடசாலைகளில் பகிஸ்கரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனால் அங்குள்ள பாடசாலைகள் அனைத்தும் செயலிழந்தன.

இதேவேளையில் கொள்ளையடிக்கப்பட்ட கணணிகளை சர்வதேச செஞ்சிலுவைக்குழுவைச் சேர்ந்த அதிகாரிகள் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனக்கோரி, சர்வதேச செஞ்சிலுவைக குழுவான மூதூர் அலுவலகத்தின் எதிரில் இன்று காலை முதல் மறியல் போராட்டம் நடைபெற்றது.

அந்த ஆர்ப்பாட்டத்தின்போது தான் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் வாகனங்கள் மூன்று சேதப்படுத்தப்பட்டன என்று ர்சா குணவர்த்தனா தெரிவித்தார்.



### தேர்தல் கண்காணிப்பு குழு திருமலை வருகை

(திருமலை நிருபர்)

ஐரோபபிய யூனியன் தேர்தல் கண்காணப்புக்குழ பிரதிநிதிகள் நேற்று திருமலைக்கு 2வது தடவையாக விஜயம் மேற்கொண்டனர். மாவட்ட தேர்தல் அத்தாட்சி அலுவலகா் ஏ.ரி. சந்திர தாச. மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ் . அருமைனாயகம் ஆகியோரை சந்தித்து தோதல் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்தனா்.

இதே வேளை நேற்று முந்தினம் மூதூரில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதலில் காயமடைந்தவா்களை திருமலை வைத்திய சாலைக்கு சென்று பார்வையிட்டதுடன் தமது கவலையையும் தெரிவித்துள்ளனா்

### தேசிய ஐக்கிய ........

1ம் பக்க தொடர்ச்சி

சிரேஸ்ட தலைவிரான ஆனந்த சங்கரி கருத்து தெரிவிக்கையில்.இருபதுக்கு மேற்பட்ட வாகனங்களில் வந்த ஆர்பாட்டகாரர்கள் கூட்டணிக்கு எதிராக கோஷமிட்டனர் அலுவலக விளம்பரப்பலகையை அடித்து நொருக்கினா்.அவா்கள் கொண்டு வந்திருந்த பதாதைகள், பிரயோகித்த வார்த்தைகள் நாங்கள் ஈ.பி.டி.பி. கட்சியினரின் ஆட்சியில் நிம்மதியாக இருக்கிறோ ம்.எனத் தெரிவித்தமை ஆர்பாட்டம் முடிவடைந்ததும் தீவுப்பகுதியில் உள்ள ஈ.பி.டி.பிவலகத்துக்கு மேற்படி வாகனங்களில் அவா்கள் சென்றமை போன்ற காரணங்க ளினால் சம்பவத்துக் குரியவர்கள் ஈ.பி.டி.பினரே என்பது உறுதியாகக் கூற முடியும் எனத் தெரிவித்தார்.

### ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் மறுப்பு

தமிழா விடுதலைககூடடணி அலுவலகம் ஈ.பி.டி.பி ஆதரவாளர்களால் தாக்கப்பட்டதாக வெளியான செய்தி தொடர்பாக ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மறுப்பு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில் ஈ.பி.டி.பி.கட்சியினருடன் மக்கள் இருக்கும் ஆதரவினை சகிக்க முடியாமல் தங்களுடைய தோல்விகளை நியாயப்படுத்தும் குற்றச்சாட்டுகளையே நீண்ட காலமாக தமிழர் விடுதலைக்கூட்டணி ஈ.பி.டி.பி. மீது சுமர்த்தி வருகிறது.

அண்மையில் த.வி.கூட்டணி சிரேஸ்ட தலைவர் ஆனந்த சங்கரியின் சில கருத்துக்களை பொறுக்க முடியாது பொது மக்கள் எழுச்சி கொண்டு நடத்திய ஆர்பாட்டமே இதுவாகும் இதில் ஈ.பி.டி.பி. பங்கு கொள்ளவில்லை எனவும் தெரிவித்தார்.

### ஹிஸ்புல்லா

1ம் பக்க தொடர்ச்சி

காரணங்களையிட்டு பொது வைபவங்கள் இடைநிறுத்தம் செயயப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கிழக்கு மாகாணத்திற்கான ஆயுள் வேத வைத்திய சாலை மற்றும் கல்லாறு பிரதேசத்திற்கான தபால் கந்தோர். ஆகிய திறப்புவிழா வைபவங்களில் பிரதியமைச்சர் ஹஸ்புல்லா் இவ்வாரம் கலந்து கொள்ள இருந்தமை குறிப்பிடத்தக்கது.







பொதுஜன ஐக்கிய முன்னணி

மட்டக்களப்பு மாவட்டத்தில் பூரண அபிவிருத்திக்கு
பொதுஜன ஐக்கிய் முன்ன்ணியின்
முதன்மை வேட்பாளர்
கே. எஸ் கணேசமூர்த்தி அவர்களுக்கு
வாக்களிப்போம் !



**உடன் தேவை**

Adobe PageMaker 6.5 இல் தமிழ் டைப்செட்டிங் மற்றும் பக்க வடிவமைப்பு வேகமாகச் செய்யக்கூடியவர்கள் உடன் தேவை. தகுதியானவர்கள் தகுந்த அத்தாட்சிபத்திரங்களுடன் எதிர்வரும் 04-10-2000 புதன் இன்று காலை 10 மணிக்கு தினக்கதிர் காரியாலயத்துக்கு வரவும்

நிர்வாகி
தினக்கதிர்




வீணை

ஈ.பி.டி.பி


நேர்மையான அர்ப்பணிப்பு!
சோர்வின்றி தொடரும் முயற்சி!
சோதனையால் கலங்காத
தெளிவு!
வீணைக்கே வாக்களிப்போம்!


இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிக்கேஷன் நிறுவனத்தினரால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.